# உயர்நிலை வகுப்புகள் – மாநிலக் கற்றல் விளைவுகள் - வகுப்பு -9

| இயல் - பொருண்மை | கற்றல் விளைவு | பாடத்தலைப்பு | கற்றல் விளைவுகள் எண் |
|---|---|---|---|
| 1 மொழி | 1. மொழியின் தேவை, தோற்றம், தொன்மை, தனித்தன்மை, மொழிக்குடும்ப அமைப்பு அறிந்து சூழலுக்கு ஏற்றவாறு பயன்படுத்துதல் (பேசுதல், எழுதுதல்). | திராவிட மொழிக்குடும்பம் | 9001 |
| | 2.வேறுபட்ட கவிதை வடிவங்களைப் படித்து மையப் பொருளுணர்ந்து சுவைத்தல் மற்றும் அவை போன்ற கவிதை வடிவங்களை எழுதுதல். | தமிழோவியம் தமிழ்விடு தூது | 9002 |
| | 3.தமிழ்ச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் வேறுபடுத்தும் திறனறிந்து தனித்தமிழைப் பயன்படுத்துதல். உரையாடலின் வடிவத்தை உணர்ந்து படித்து அது போன்று கட்டமைத்தல். | வளரும் செல்வம் | 9003 |
| | 4.மொழியின் தொடர் அமைப்பினை அறிந்து பேசுதல், கடிதம், கட்டுரை, உரையாடல்களைக் கட்டமைத்து முறையாக எழுதுதல். | தொடர் இலக்கணம் | 9004 |

| | | | |
|---|---|---|---|
| 2<br>**இயற்கை, சுற்றுச்சூழல்** | 5.சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் மொழிக்கூறுகளைக் கருத்தரங்கிற்கு ஏற்றவாறு திரட்டி, பகுத்தும் தொகுத்தும் முறைப்படுத்திப் பேசுதல். | நீரின்றி அமையாது உலகு | 9005 |
| | 6.பாடல்களில் வெளிப்படுத்தப்படும் இயற்கையழகை உணர்ந்து உள்வாங்குதல், கவிதையின் மொழிநடையைப் படித்தறிந்து புதிதாக உருவாக்குதல். | பட்டமரம் | 9006 |
| | 7.சமய இலக்கியம் காட்டும் சமூகச்செழுமை, வளத்தை வெளிப்படுத்தும் சந்தநயமிக்கச் சொற்கூறுகளை நயமுணர்ந்து படித்தல். | பெரியபுராணம் | 9007 |
| | 8.இயற்கை இணைந்த சமூகவாழ்வையும் அதனுடன் இணைத்துச் சொல்லப்பட்ட வாழ்வியல் உண்மைகளையும் சங்க இலக்கியம்வழியாகப் படித்தல், சங்கச் சொற்களின் பொருளறிந்து பயன்படுத்துதல். | புறநானூறு | 9008 |
| | 9.கதைகள், கட்டுரைகளைப் படித்துக் கருத்துகளைச் சுருக்கியும் விரித்தும் எழுதுதல். | தண்ணீர் | 9009 |
| | 10. மொழியின் இலக்கணக்கூறான துணைவினைகளைப் பேச்சிலும் எழுத்திலும் இனம்கண்டு முறையாகப் பயன்படுத்துதல். | துணைவினைகள் | 9010 |

| | | | |
|---|---|---|---|
| 3<br>**பண்பாடு** | 11. மொழியில் பொதிந்துள்ள பண்பாட்டுப் பெருமைகளையும் தொல்லியல் தொன்மைகளையும் படித்துணர்தலுடன் அறம், மறம், கொடை, நேர்மை போன்ற சமூக மதிப்புகளைப் படைப்புகளில் வெளிப்படுத்துதல். | ஏறுதழுவுதல் | 9011 |
| | 12. பண்டைய சமூக விழா மரபினைக் காப்பிய மொழியின்வழியாகப் படித்தல், விழாக்கள் பண்பாட்டின் தொடர்ச்சியாகக் கொண்டாடப்பட்டு வருபவை என்பதை உணர்ந்து பங்கேற்றல். | மணிமேகலை | 9012 |
| | 13. பட்டிமன்றம், சொற்போர் போன்ற சொல்வன்மையை வளப்படுத்தும் செயல்களில் பயிற்சிபெறுதல், தொல்லியல் எச்சங்களைப் பாதுகாத்தல். | அகழாய்வுகள் | 9013 |
| | 14. வல்லினங்களைப் பயன்படுத்தும் இடமறிந்து எழுதுதல். | வல்லினம் மிகும் இடங்கள் | 9014 |
| | 15. அறநூலில் சொல்லப்பட்டுள்ள நன்னெறிக் கருத்துகளின் முறைமையையும் செப்பத்தையும் படித்துப் புரிந்துகொள்ளுதல், பயன்படுத்துதல். | திருக்குறள் | 9015 |
| 4 | 16. மின்னணு இயந்திரங்களின் தேவையையும் | இயந்திரங்களும் | 9016 |

| | | | |
|---|---|---|---|
| **அறிவியல், தொழில்நுட்பம்** | இணையத்தின் இன்றியமையாமையையும் சமூகத் தேவைகளுக்கேற்ப மேம்பட்டு வருவதை உணர்ந்து மொழியைப் பயன்படுத்துதல். | இணையவழிப் பயன்பாடும் | |
| | 17. அறிவியல் செய்திகளையும் கவிதையாக்க முடியும் என்பதை அறிந்து படைப்பூக்கம் பெறுதல். | ஓ என் சமகாலத் தோழர்களே! | 9017 |
| | 18. இலக்கண இலக்கியங்கள் காட்டும் தமிழர்களின் அறிவியல் சிந்தனைகளை அறிவியல் செய்திகளோடு ஒப்பிட்டுப் புரிந்துகொள்ளுதல். | உயிர்வகை | 9018 |
| | 19. நேர்காணல் கட்டுரையின் அமைப்பையும் நோக்கத்தின் அடிப்படையில் வினாக்களைக் கட்டமைத்தலையும் அவற்றின் மொழிநடையையும் அறிந்துகொள்ளுதல். | விண்ணையும் சாடுவோம் | 9019 |
| | 20. ஒற்றுப்பிழையின்றி எழுதுதல். | வல்லினம் மிகா இடங்கள் | 9020 |
| **கல்வி** | 21. இலக்கியங்கள் வழியாகச் சமூக மக்களின் வாழ்க்கைமுறையை அறிந்து இன்றைய வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்ளும் திறன்பெறுதல். | கல்வியிற் சிறந்த பெண்கள் | 9021 |

| | | | |
|---|---|---|---|
| | 22. புதுக்கவிதை என்னும் இலக்கிய வடிவத்தின் அமைப்பு, மொழிநடையைப் புரிந்துகொள்ளல், படித்தல், படைத்தல். | குடும்ப விளக்கு | 9022 |
| | 23. அறஇலக்கியத்தின் எளிய, செம்மையான மொழிநடையையும் கருத்துச்செறிவையும் படித்து வாழ்வியல் பண்பை மேம்படுத்துதல். | சிறுபஞ்சமூலம் | 9023 |
| | 24. நூலகத்தின் பயனறிந்து பயன்படுத்துதல், பிறரையும் படிக்க வழிகாட்டுதல், படித்தவற்றை எடுத்துரைத்தல். | வீட்டிற்கோர் புத்தகசாலை | 9024 |
| | 25. இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் சொற்களை முறையாகப் பயன்படுத்துதல். | இடைச்சொல், உரிச்சொல் | 9025 |
| 6 **கலை, அழகியல், புதுமைகள்** | 26. வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழர் சிற்பக்கலையைப் போற்றுதலோடு சிற்பங்களைக் கூர்ந்து நோக்குதல், அவை பற்றிய செய்திகளைத் திரட்டுதல், செய்திக்குறிப்பு உருவாக்குதல். | சிற்பக்கலை | 9026 |
| | 27. இலக்கியத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஐவகை நிலங்களின் அழகை நுகர்ந்து அவற்றை விவரித்து எழுதுதல். | இராவண காவியம் | 9027 |
| | 28. பொருள் உணர்ந்து பிரித்துப்படித்தல் வாயிலாகப் பக்தி இலக்கியச் | நாச்சியார் திருமொழி | 9028 |

| | | | |
|---|---|---|---|
| | சொற்கூறுகளையும் பொருள் வெளிப்பாட்டினையும் அறிந்து பயன்படுத்துதல். | | |
| | 29. சிறுகதையின் மையக்கருத்து வாயிலாகச் சமூக மதிப்புகளை உணர்ந்து பின்பற்றுதல். | செய்தி | 9029 |
| | 30. மொழிப் பயன்பாட்டில் புணர்ச்சி இலக்கண அடிப்படைகளை அறிந்து பயன்படுத்துதல். | புணர்ச்சி | 9030 |
| | 31. திருக்குறளின் எளிய வடிவத்தையும் அதன் பொருளையும் அறிந்து சுவைத்தல், வாழ்வியல் திறன்களை உணர்ந்து பின்பற்றுதல். | திருக்குறள் | 9031 |
| **7 நாகரிகம், தொழில், வணிகம், நாடு, சமூகம், அரசு, நிருவாகம்** | 32. விடுதலைப்போரில் தமிழர்கள் ஆற்றிய தொண்டினை உணர்ந்து நாட்டுணர்வு பெறுதல், அதனை மொழியின் வாயிலாக வெளிப்படுத்துதல், சமூகத்திற்குத் தம்மால் இயன்ற பணிகளை அளிக்கத் தாமாக முன்வருதல். | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | 9032 |
| | 33. பெருங்காப்பியம் காட்சிப்படுத்தியுள்ள செழிப்பான நாட்டுவளத்தினை மொழிவழி பெற்றுச் சுவைத்தல், சொல் வளங்களைப் பயன்படுத்துதல். | சீவக சிந்தாமணி | 9033 |

| | | | |
|---|---|---|---|
| | 34. இலக்கியங்கள் விவரிக்கும் நாட்டு வளம் குறித்த செய்திகளை அறிந்து நாட்டை வளப்படுத்தும் ஊக்கத்தைப் பெறுதல். | முத்தொள்ளாயிரம் | 9034 |
| | 35. இலக்கியங்கள்வழி அறிந்த நகர அமைப்புகளை இன்றைய நிலையுடன் ஒப்பிட்டுப் பேசுதல். | மதுரைக்காஞ்சி | 9035 |
| | 36. ஒரு தலைப்பையொட்டிக் கருத்துகளை ஒருங்கிணைத்து, உரையாடலாக/கலந்துரையாடலாக வெளிப்படுத்துதல். | சந்தை | 9036 |
| | 37. மொழிப்பயன்பாட்டில் ஆகுபெயர் எவ்விதம் வெளிப்படுத்தப்படுகிறது என்பதை அறிந்து கையாளுதல். | ஆகுபெயர் | 9037 |
| **8 அறம்,தத்துவம், சிந்தனை** | 38. மொழியில் வழங்கப்பட்டுள்ள சிந்தனைமரபுகளைப் படித்தறிதலுடன் ஒரு சமூகக்கருத்தையொட்டி தர்க்க அடிப்படையில் கலந்துரையாடுதல். அறச்செயல்களைப் பின்பற்றி வாழும் எழுச்சிபெறுதல். | பெரியாரின் சிந்தனைகள் | 9038 |
| | 39. நடைமுறையில் பயன்படுத்தப்படும் எளிய சொற்கள் வாயிலாகவே தத்துவக்கருத்துகள் புதுக்கவிதையில் சொல்லப்பட்ட | ஒளியின் அழைப்பு | 9039 |

| | | | |
|---|---|---|---|
| | தன்மையுணர்தல், அது போன்று எழுதுதல். | | |
| | 40. மொழிபெயர்ப்பு மொழியின் வாயிலாகத் தத்துவங்களைப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றுதல். | தாவோ தே ஜிங் | 9040 |
| | 41. சிறுகாப்பிய மொழிநடையில் அறக்கருத்துகளைப் புரிந்துகொள்ளுதல், படைக்கப்பட்ட காலத்துடன் ஒப்பிட்டுப் புரிந்துகொள்ளுதல், எண்ணங்களை வெளிப்படுத்துதல். | யசோதர காவியம் | 9041 |
| | 42. செப்பமான மொழிநடையைப் படித்துச் சுவைத்தல், பல்வேறு கடித உத்திகளையும் வடிவங்களையும் அறிந்து எழுதுதல். | மகனுக்கு எழுதிய கடிதம் | 9042 |
| | 43. தலைப்பை மையமிட்டுக் கவிதை புனைதல் / பாடல் எழுதுதல். | யாப்பிலக்கணம் | 9043 |
| 9<br>**மனிதம், ஆளுமை** | 44. சான்றோர்கள், அறிஞர்களின் தமிழ்ப்பணிகளைப் படித்துணர்ந்து தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்தல். | விரிவாகும் ஆளுமை | 9044 |
| | 45. தற்காலக் கவிதைப் போக்கினை அறிந்து புதுக்கவிதைகளைப் படித்தல், அவை போல எழுதுதல். | அக்கறை | 9045 |
| | 46. அன்பின் வயப்பட்ட வாழ்க்கை சங்க | குறுந்தொகை | 9046 |

| | | | |
|---|---|---|---|
| | காலத்திலும் நிலவி வந்ததை இலக்கியம் வாயிலாகப் படித்தறிதல். | | |
| | 47. மனிதம் சார்ந்த படைப்புகளைப் படிப்பதன் வாயிலாக மனிதநேயப் பண்புகளைத் தக்க சூழலில் உணர்ந்து பின்பற்றுதல். | தாய்மைக்கு வறட்சி இல்லை | 9047 |
| | 48. அணியிலக்கணத்தை அறிந்து செய்யுளைச் சுவைத்துப் படித்தல். | அணியிலக்கணம் | 9048 |